31.12.2011

# புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

புதுச்சேரி வாழ்மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மலர்ந்து வரும் புத்தாண்டு புதுச்சேரி மக்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் இனிய ஆண்டாக விளங்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் புதிய ஆண்டில் நம் மக்களின் வாழ்வில் நன்மைகள் ஏற்பட்டு எல்லா வளங்களும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட துன்பங்களை மறந்து, நன்மைகளை மட்டும் மனதில் கொண்டு, வரும் ஆண்டில் எல்லா மக்களும் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையுணர்வுடனும், சகோதர பாசத்துடனும் பழகி வாழ்வில் அமைதியுடன் வாழ்ந்து புதுச்சேரி மாநிலத்தை வளமிக்க மாநிலமாக உருவாக்க முயல வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ~~இந்த~~ ஆண்டு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இயற்கை பேரழிவு நிகழ்விலிருந்து புதுச்சேரி மக்கள் மீண்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிடவும், மேலும் இல்லாதோர் எனும் நிலை மாறிடவும், எல்லோரும் எல்லா செல்வங்களும் பெற்று இன்புறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

Sd/-

(வ. சபாபதி (எ) கோதண்டராமன்)

வ. சபாபதி (எ)
கோதண்டராமன்
பேரவைத் தலைவர்
சட்டப் பேரவை
புதுச்சேரி